[15th November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : There are certain advantages in the hereditary system. There are also certain disadvantages in that system. Similarly, there are certain advantages in the non-hereditary system and disadvantages also. So, we will have to find out the best way of appointing those who will be best fitted for the job. That will be considered, Sir.

SRI M. P. PERIASAMI : ஹரிஜனங்களில் தகுதி வாய்ந்தவர்களை முனிசிப், கணக்குப் பிள்ளை போன்ற கிராம உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுப்பதற்கு அரசாங்கம் சலுகை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த ஹெரிடிடரி முறையிலே ஒன்றும் செய்ய முடியாது. மற்ற நியமனங்களிலே தகுதி உள்ளவர்கள் இருந்தால் நியமிக்கலாம். அதில் ஒன்றும் தடையில்லை.

SRI T. S. RAMASWAMY PILLAI : இந்த முறையை மாற்றி அமைப்பதில் எவ்வளவோ கஷ்டங்கள் இருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறினார்கள். இவைகள் நிதி சம்பந்தமான கஷ்டங்களா அல்லது வேறு விதமான கஷ்டங்களா ? இந்த ராஜ்யத்திலிருந்து பிரிந்துபோன மலபார் ஜில்லாவிலே இந்த முறையை மாற்றிவிட்டார்கள். அதுபோல இங்கும் மாற்றி அமைக்க முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மாற்றி அமைப்பது முடியாது என்று சொல்லவில்லை. மாற்றி அமைப்பதற்கு வேண்டிய தகவல்களெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறோம். "ஹெரிடிடரி" முறையில் அவர்கள் அங்கே வாலாயமாக இருப்பவர்களாதலால், அங்கு ஒரு குட்டி முதலாளிகளாக ஆகிவிடுகிறார்கள். அங்கே அவர்களுக்கு ஆதிக்கம் ஜாஸ்தியாக இருக்கிறது.

SRI K. B. S. MANI : ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்தைக் கருதி அவர்களுக்கு ஓரளவு தகுதியும் திறமையும் இருந்தாலும் கூட, அவர்களுக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் பதவி கொடுக்க அரசாங்கம் சலுகை காட்டுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் ஏற்கனவே சொன்னேன்? சலுகை காட்டக்கூடிய சந்தர்ப்பத்தில் காட்டமுடியும் என்று சொன்னேன்.

SRI M. JAGANNATHAN : கிராம உத்தியோகஸ்தர்களை "இஸம்ஷிப்" முறையில் நியமனம் செய்வதை கைவிட்டுவிட்டு, எஸ்.எல்.எல்.ஸி. படித்து "லோயர் டிவிஷன் கிளார்க்" ராங்கில் உள்ளவர்களை மதராஸ் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மூலம் நியமனம் செய்வதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : "இஸம்ஷிப்" முறையும் "ஹெரிடிடரி" முறையும் ஒன்று என்று தாழ்மையுடன் கனம் அங்கத்தினருக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Anamalai Ropeway Company

* 202 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Anamalai Ropeway Company have been exempted from the operation of the Madras Shops and Establishments Act, 1947; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.